**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

*முனைவர். மா. ராஜவேல்,* Ph.D.
*மக்கள் தொடர்பு அலுவலர்*
*கைப்பேசி: **94890 56730***

*தொலைபேசி: **0422 - 6611302***
*நிகரி: **0422 - 2431821***
*மின்னஞ்சல்:*pro@tnau.ac.in

*பெறுநர்,*
*ஆசிரியர்,*

*தேதி: **22.08.2026***

*ஐயா,*

*கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.*

## வேளாண் அறிவியலாளர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி

வேளாண் அறிவியலாளர்களின் ஆராய்ச்சி மேன்மை, புதுமையான கற்பித்தல் நடைமுறைகள் மற்றும் கல்வித் தலைமைத்துவத் திறன்களை மேம்படுத்துவதில் தொடர்ச்சியான தொழில்முறை வளர்ச்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் உள்தர உறுதிப்படுத்தல் பிரிவு (IQAC) சார்பாக திறன் மேம்பாட்டுப் பயிற்சி 19.8.2026 முதல் 21.8.2026 வரை மூன்று நாள் நடத்தப்பட்டது.

இப்பயிற்சி, வேளாண் அறிவியலாளர்களின் தொழில்முறை திறன்களை மேம்படுத்தும் வகையில் பல்வேறு நிபுணர் அமர்வுகளுடன் பயனுள்ளதாக அமைந்தது. உயர்மதிப்புள்ள ஆராய்ச்சி முன்மொழிவுகளை உருவாக்குதல், இந்திய உயர்கல்வி முறையைப் புரிந்துகொள்ளுதல், கல்விசார் மேன்மைக்கான தர உறுதி நடைமுறைகள், இணையப் பாதுகாப்பு மற்றும் தரவு தனியுரிமை, மேலும் உயர்தர (Q1) அறிவியல் இதழ்களில் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடுவதற்கான உத்திகள் குறித்து விரிவான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

மேலும், மெய்நிகர் உண்மை (Virtual Reality – VR), மேம்படுத்தப்பட்ட மெய்நிகர் உண்மை (Augmented Reality – AR), செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த கற்பித்தல் முறைகள், கல்வி செயலிகள், விளையாட்டு அடிப்படையிலான கற்றல் மற்றும் வேளாண் விரிவாக்கத்தில் நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு குறித்து பங்கேற்பாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. தொழில்நுட்ப தாக்க மதிப்பீடு, உணர்வுசார் நுண்ணறிவு மற்றும் பயனுள்ள கற்பித்தல் நடைமுறைகள் தொடர்பான அமர்வுகள், மாறிவரும் கல்வி மற்றும் ஆராய்ச்சிச் சூழலுக்கு ஏற்ப

பேராசிரியர்களின் முழுமையான திறன் மேம்பாட்டின் அவசியத்தை எடுத்துரைத்தன.

இப்பயிற்சி அமர்வுகள், நேரடி செய்முறைப் பயிற்சிகள், எழுத்துப்பூர்வ செயல்பாடுகள் மற்றும் கணினி வழிப் பயிற்சி தொகுதிகள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் மிகவும் பயனுள்ளதாகவும், பங்கேற்பாளர்களை ஈடுபடுத்தும் வகையிலும் அமைந்தன. இத்தகைய செயல்முறை அணுகுமுறைகள் மூலம் பங்கேற்பாளர்கள் கருத்துகளை ஆழமாகப் புரிந்துகொள்வதுடன், பயிற்சியில் பெற்ற அறிவு மற்றும் திறன்களை தங்களது கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிப் பணிகளில் திறம்பட செயல்படுத்துவதற்கான வாய்ப்பைப் பெற்றனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர் முனைவர் பெ. ராஜ்குமார் அவர்கள் மற்றும் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர் முனைவர் கா. வெங்கடேசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்குநர் முனைவர் பி. ஜெயக்குமார் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

இணைப்பேராசிரியர் (தோட்டக்கலை) முனைவர் பெ.சா. கவிதா அவர்கள் வரவேற்புரையாற்றினார். திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் IQAC ஒருங்கிணைப்பாளர் மற்றும் பேராசிரியர் (வனவியல்) முனைவர் சு. உமேஷ்கண்ணா அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்